அ.வ.எண் : 145/2017

தேதி : 10.02.2020.

பெயர் : துரைசாமி

நேரம் : பிற்பகல் 12.47 முதல் 12.58

**வா.த.சா.1 முதல் விசாரணை**

17.11.1960 ம் தேதியிட்ட ருக்மணி அம்மாள் வேங்கையம்மாளுக்கு எழுதிக்கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.1, 31.12.1962 ம் தேதியிட்ட சிங்காச்சாரி , வெள்ளை நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ-2, 12.01.1976 ம் தேதியிட்ட வெள்ளை நாயக்கர் மற்றும் வேங்கையம்மாள் ஒரு ராமதாஸ் நாயக்கருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.3, 18.12.1997 ம் தேதியிட்ட சுந்தரம்மாள் மற்றும் அவரின் வாரிசுகள் கூட்டாக வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.4, 24.04.2003 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பட்டா எண்.4 காஞ்சிபுரம் வட்டாச்சியரால் வழங்கப்பட்ட பட்டா அசல் வா.த.சா.ஆ.5 (இந்த ஆவணம் குறியீடு செய்யும் போது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது), தாவா சொத்தின் புகைப்படம் மற்றும் குறுந்தகடு வா.த.சா.ஆ.6, அ.வ.எண்.143/2017 என்ற வழக்கில் எனக்கு வாதி தாக்கல் செய்துள்ள தாவாவின் நகல் நீதிமன்றத்தின் மூலம் சார்வு செய்யப்பட்ட நகல் வா.த.சா.ஆ-7, அ.வ.எண்.143/2017 என்ற வழக்கில் இ.கா.ம.எண்.453/2017 ல் சார்வு செய்யப்பட்ட நகல் வா.த.சா.ஆ.8 , தாவா சொத்திற்கான 01.01.1981 முதல் 02.07.2018 ம் கால கட்டத்திற்கு பெற்ற வில்லங்க ஆவணத்தின் அசல் வா.த.சா.ஆ-9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேலும் ஆவணங்கள் குறியீடு செய்யும் பொருட்டு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).